29th October 1962]

கனம் திரு. பூ. கக்கன் : வீடு கட்டும் திட்டம் குறிப்பாக ஹரிஜன நல இலாக்காவால் நடத்தப்படுவதில் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள், டீ-நோடிபைட் மக்கள்—இப்படிப்பட்டவர்களுக்காகத்தான் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. பின் தங்கிய மக்களுக்காக விலேஜ் ஹௌஸிங் ஸ்கீம் இருக்கிறது. அதிலேயிருந்து இவர்களுக்கு வீடுகள் கிடைக்கும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : சென்னையில் ஹரிஜனங்களுக்காக சேரிகளில் வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டங்கள் உருவாக்கப்பட்டும்கூட, இன்னும் ஒரு திட்டம்கூட அமுலாக்கப்படவில்லை என்று கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அப்படியென்றால், எப்பொழுது அமுலாக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : சென்னை நகர ஹௌஸிங் போர்டு ஸ்லம் இம்ப்ரூவ்மென்டு ஸ்கீம் மூலமாக வீடுகள் கட்டப்படுகின்றன.

Sri K. V. SWAMINATHAN : Will the Hon. the Minister consider the desirability of extending these facilities to some of the most backward communities such as washermen, barbers and also moopanars?

The Hon. Sri P. KAKKAN : We addressed the Government of India but they did not accept.

திரு. கோ. சி. மணி : ஆதித் திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு மனையும், வீட்டு வசதியும் ஏற்பாடு செய்து தருவதாகச் சொல்லும் கனம் அமைச்சர் அவர்கள் தேவஸ்தானத்திற்கு சொந்தமான நிலம் இருந்தால், அதை ஆதித் திராவிடர்கள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டால், அதை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க முன்வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : கோயில் நிலமாக இருந்தாலுங்கூட, அங்குள்ள ஜனங்கள் அந்த இடத்தை வீடு கட்டிக் கொள்வதற்காகக் கேட்டால், அதுபற்றிப் பரிசீலனை செய்து, எடுத்துக் கொடுத்து வீடு கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

Schools

* 838 *Q.*—**Sri S. MADHAVAN :** Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of high schools opened; and

(*b*) the number of higher elementary schools raised to high schools in 1961, district-war?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the Table of the House.

* 839 **கேள்வி.—திரு. முனு. ஆதி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை-தேனாம்பேட்டைக்கு அருகில் அரசாங்கமே ஓர் உயர்நிலைப்பள்ளி துவக்கி நடத்தும் உத்தேசமுண்டா?

---

a Printed as Appendix II on pages 107–108